# யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்த அறிக்கை
## 2011 - 2012

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## செயற்குழு உறுப்பினர்கள் - 2011 - 2012

| | |
|---|---|
| திரு. அ. கயிலாயபிள்ளை (அதிபர்) | - தலைவர் |
| திரு. ந. பாலச்சந்திரன் | - துணைத் தலைவர் |
| திரு. கா. சிவஞானசுந்தரம் | - செயலாளர் |
| திருமதி சுந்தரலிங்கம் இராஜஜீவி | - துணைச்செயலாளர் |
| திரு. பு. குகானந்தன் | - பொருளாளர் |
| டாக்டர் த. குகதாசன் | - பெற்றோர் பிரதிநிதி |
| திரு. ச. நந்தகுமார் | - பெற்றோர் பிரதிநிதி |
| சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக்குருக்கள் | - பெற்றோர் பிரதிநிதி |
| திரு. தி. முருகதாஸன் | - பெற்றோர் பிரதிநிதி |
| திரு. ம. குமாரவேல்ராஜா | - பெற்றோர் பிரதிநிதி |
| திருமதி ஜெகதீசன் செல்வராணி | - பெற்றோர் பிரதிநிதி |
| திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன் | - பெற்றோர் பிரதிநிதி |
| திருமதி நளாயினி கண்ணதாசன் | - பெற்றோர் பிரதிநிதி |
| திரு. ஒ. விஜயதாசன் | - ஆசிரிய பிரதிநிதி |
| திரு. ந. ரவிக்குமார் | - ஆசிரிய பிரதிநிதி |
| திருமதி வித்யா மகேந்திரன் | - ஆசிரிய பிரதிநிதி |
| திருமதி க. ஸ்ரீதரன் | - ஆசிரிய பிரதிநிதி |
| திரு. வே. உதயகுமார் | - ஆசிரிய பிரதிநிதி |
| திரு. த. பாலசண்முகநாதன் | - ஆசிரிய பிரதிநிதி |
| பேராசிரியர் க. கந்தசாமி | - நலன்விரும்பி |
| திரு. செ. சபாரத்தினம் | - நலன்விரும்பி |
| திரு. இ. கைலைநாதன் | - நலன்விரும்பி |
| திரு. ம. தயாகுமரன் | - கணக்காய்வாளர் |

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
சாவகச்சேரி.
15-04-2012

திரு./திருமதி: ..................................................................................

..................................................................................

..................................................................................

# பாடசாலை அபிவிருத்திச் சங்க
# <u>பொதுக்கூட்டம் - 2012</u>

**தலைவர்: திரு. அ. கயிலாயபிள்ளை அவர்கள் (அதிபர்)**

**இடம்: கல்லூரி அருணாசலம் மண்டபம்**

**காலம்: 29-04-2012 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 09-00 மணி**

- *இறை வணக்கம்*
- *தலைமையுரை*
- *செயலாளர் ஆண்டறிக்கை*
- *பொருளாளர் அறிக்கை*
- *புதிய நிர்வாகசபைத் தெரிவு*
- *பாடசாலை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகள்*
- *நன்றியுரை*

அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை பொதுக்கூட்டத்திற்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளவும். தயவுசெய்து கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**அ. கயிலாயபிள்ளை**
*தலைவர்*

**கா. சிவஞானசுந்தரம்**
*செயலாளர்*

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# ஆண்டுச் செயற்பாட்டு அறிக்கை 2011

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் 2011 ஆம் வருடத்துக்குரிய செயற்பாட்டு அறிக்கையினை வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

2011-ம் ஆண்டு மார்ச் மாதம் 27 திகதி தெரிவுசெய்யப்பட்ட இச்சபை அங்கத்தவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கான பல நடவடிக்கைகளை எடுத் துள்ளனர். இந்த ஆண்டிலே ஒன்பது செயற்குழுக் கூட்டங்களை நடாத்தி கல்லூரியின் பல்வேறு தேவைகளை நிறைவுசெய்வதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.

கல்லூரியில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லை. பகுதிநேர அடிப்படையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்த சுகாதாரத் தொழிலாளியும் திருப்திகரமான சேவையாற்றாமையால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலையின் சுகாதாரத் தேவைக்கு முன்னுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். எமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டாக்டர் த. குகதாசனின் ஆலோசனைப்படி வைத்தியசாலை சுத்திகரிப்பு பணியினை மேற்கொள்ளும் 'எவரெடி சுத்திகரிப்பு நிறுவனத்தின்' சேவையை நாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் வைத்தியசாலைகளின் சுத்திகரிப்பினை கேள்வி முறை மூலம் சுகாதார திணைக்களத்திடம் இந்நிறுவனம் பெற்று தனது தொழிலாளர்கள் மூலம் செவ்வையாகச் செய்வதை எமது சபை அவதானித்தது. ஒரு தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு 420/= ரூபா வேதனம் என்ற அடிப்படையில் இரு தொழிலாளர்களை 09-04-2011 ஆந் திகதி முதல் நியமித்து கழிப்பறை துப்பரவு, சுற்றுப்புறத் துப்பரவு ஆகிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தேவையை நிறைவேற்றுவதற்கு அனுமதி பெறுவதற்காகவும் நிதி சேகரிப்பதற்காகவும் கல்லூரியின் பெற்றோருக்கான கூட்டம் 13-11-2011 ஆந் திகதி நடத்தப்பட்டது. பெற்றோர் தம்மால் இயன்ற நிதி இத்தேவைக்கு வழங்குவதாக ஏகமனதாகத் தெரிவித்தனர். 2011 ஆம் ஆண்டில் சுகாதார தொழிலாளர் வேதனம், சுகாதாரம் சார்ந்த செலவுகளுக்காக 1,63,430 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2012-ம் ஆண்டில் எவரெடி சுத்திகரிப்பு நிறுவன சுகாதாரத் தொழிலாளர் களுக்கான வேதனம் 482 ரூபா கூறுவிலைக்கு சுகாதாரத் திணைக்களம் ஒப்பந்தம் செய்துள்ளதால் கல்லூரியும் அத்தொகைக்கே செய்ய வேண்டிய

நிலை ஏற்பட்டுள்ளது. 2012 பெப்ரவரி மாதம் முதல் 482 ரூபா நாளாந்த வேதனப்படி இருவரை மீள் நியமனம் செய்துள்ளது. இந்நியமனம் மூலம் மாணவர்களின் சுகாதாரச் சுத்தம் சம்பந்தமான அசௌகரிய நிலைக்குத் தீர்வு காணப்பட்டது.

**ஒப்பந்த வேலைகள்**

மாணவர்களின் கழிப்பறைத் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு 4 கழிப்பறைகள் கொண்ட கழிப்பறைத் தொகுதியை அமைப்பதற்கான 502,354 ரூபா நிதியை யுனிசெப் (UNICEF) ஒதுக்கியது. இவ்வேலை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒப்பந்தம் செய்து 6 கழிப்பறைகளும் ஓர் குளியல் அறையும் கொண்ட தொகுதியாக நிறைவேற்றியது. அத்துடன் அக் கழிப்பறைத் தொகுதியுடன் இணைந்ததாக 100' நீளமான எல்லை மதிலும் அமைக்கப்பட்டது. 23-07-2011 முதல் 17-09-2011 வரையான காலப்பகுதியில் இவ்வேலைகள் நிறைவேற்றப்பட்டதுடன் 821789.20 ரூபா இப்பணிக்காக செலவிடப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் 319434.30 ரூபா இதற்கான மேலதிக நிதி பெறப்பட்டது.

உலக உணவுத்திட்ட நிறுவனத்தின் (WFP) 1,26,000 ரூபா நிதியுதவி யுடன் 03-11-2011 முதல் 25-11-2011 வரையான காலப்பகுதியுள் சமையலறை அமைக்கப்பட்டது. தரம் 6 - 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கல் செயற்பாட்டுக்கு இச் சமையலறை பெருமளவுக்கு உதவுகின்றது. இதற்கான மேலதிக நிதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஒரு கட்டிடத் தொகுதியில் இயங்குகின்ற கோட்டக்கல்வி அலுவலகத்துத் திருத்த வேலைக்கான ஒப்பந்த வேலையை எமது சங்கம் பொறுப்பேற்று நிறைவு செய்துள்ளது. இதற்கு திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட 93,350 ரூபா செலவிடப்பட்டது.

கல்லூரியின் தரம் 9 வகுப்புக்கள் நடைபெறும் அரை நிரந்தர வகுப்பறைக் கட்டிடம் 57,180 ரூபா செலவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் திருத்தம் செய்யப்பட்டது. தரம் 12 வகுப்புக்கள் அரைச்சுவர் கட்டி மறைப்புக்கள் தகரத்தினால் அடைத்து சீர்படுத்தப்பட்டது.

கல்லூரியில் குரங்குகளின் தொல்லையால் வகுப்பறை தொகுதியின் கூரைகள் பெருமளவுக்கு சேதப்படுத்தப்படுகின்றன. பெருமளவான ஓடுகள் மாற்றம் செய்யப்படுவதுடன் நீர் வசதி, மின்சார விநியோகம் ஆகியவற்றுக்காகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் செலவிடப்பட்டது.

எமது கல்லூரி அதிபரின் முயற்சியினால் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்களின் சொந்தப் பண உதவி மூலம் NP YI - 7604 இலக்கம் கொண்ட முச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாகப் பெறப்பட்டது. இதன்மூலம் பாடசாலை மாணவர்களின் மருத்துவத் தேவைகளுக்கும் அவசரத் தேவைகளுக்கும் பாவிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. சிறிதரன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த முச்சக்கர வண்டியை நிறுத்துவதற்கான தரிப்பிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் நிறுவப்பட்டது.

கல்லூரி நிறுவுநர் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களின் வழித்தோன்றல் சரா. தாமோதரன் அவர்களின் மகள் மருமகன் திரு. திருமதி ஸ்ரீகுமார் தம்பதிகள் 38 இலட்சம் ரூபா பெறுமதியான 42 இருக்கைகள் கொண்ட TATA STAR பேருந்து (இல. NP NB - 0558) ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பில் பெறப்பட்ட இப்பேருந்து மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு பெருமளவு பயன்படு கின்றது. இப் பேருந்தை வழங்கிய ஸ்ரீகுமார் தம்பதியினருக்கு நன்றியைத் தெரிவிக் கின்றோம். இப்பேருந்து கையளிப்பு நிகழ்வு 2011-09-23 திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கான உபசரணைச் செலவைப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது.

பேருந்தைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான தரிப்பிடத்தை அமைப்பதற்கு ஆசிரியர் திரு. த. இரகுலேசன் தனது ஒரு மாத வேதனம் ரூபா 20,000 ஐ வழங்கி நிதி வழங்கலை ஆரம்பித்து வைக்க திரு. ப. ஜெகசீலன் ரூபாக 5,000 ஐ வழங்கினார். ஏனைய ஆசிரியர்கள் தலா 1,000 ரூபா வழங்கினர். ஆசிரியர்கள் மூலம் இந்நிதியத்திற்கு 1,26,000 ரூபா கிடைக்கப்பெற்றது. 40 அடி நீளமும் 14 அடி அகலமுமான பேருந்து தரிப்பிடம் சுமார் 6,30,000 ரூபா நிதிச் செலவுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 15,000 ரூபா செலவுடன் பேருந்து தரிப்பிடத்தின் முற்பக்கத்துக்கு மண், கட்டிட இடிபாடுகள் மூலம் நிலம் சீர்செய்யப்பட்டது.

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2011-ம் ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை அச்சிட்டு எமது பாடசாலைக்கும் சாவகச்சேரி குடும்பப் பாடசாலைகளுக்கும் வழங்கியது. இப் பரீட்சைக்கான வரவுகள் ரூபா 2,66,232.90 கிடைத்தது. பரீட்சை வினாத்தாள் அச்சிடுவதற்காக 1,56,651 ரூபாவும் செலவிடப்பட்டது.

2011ஆம் ஆண்டு நிறுவுநர் நாள் அன்று கல்லூரிச் சஞ்சிகை "தாமோதரன்" மலர் வெளியிடப்பட்டது. மலர் அச்சிடுவதற்கு 2,05,000 ரூபா செலவிடப்பட்டது. தாமோதரன் சஞ்சிகை விளம்பரம் விற்பனை ஆகியவற்றின் மூலம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு 3,68,000 ரூபா கிடைத்து.

உலக உணவுத்திட்ட மதிய உணவுக்கான மரக்கறி வகை கொள்வன வுக்காக 2011ஆம் ஆண்டில் ரூபா 3,86,232.50 வலயக்கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இல்ல விளையாட்டுப்போட்டி, பெருவிளையாட்டுக்கள் வலய மட்ட, மாகாண மட்டப் போட்டிகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் இருந்து 2011ஆம் ஆண்டில் ரூபா 1,86,518 செலவிடப்பட்டுள்ளது. கடந்த வருடங்களிலும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விகிதம் உயர்வடைந்துள்ளது.

13-11-2011 இல் விசேட பெற்றோர் கலந்துரையாடல் நடைபெற்றபோது மாணவரின் சுகாதார தேவைகள், ஒழுக்கம் போன்றவை தொடர்பாக டாக்டர் த. குகதாசன் பொதுசுகாதார பரிசோதகர், மருத்துவமாது ஆகியோரால் பெற்றோருக்கு விளக்கமளிக்கப்பட்டது. ஒரு மாணவனுக்கு வருட மொன்றுக்கு 400 ரூபா பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் செலவிடப்படுவதாக பொருளா ளரால் கூறப்பட்டது. இச் செலவை ஈடுசெய்ய ஒரு பெற்றோர் ரூபா 1,000 நிதியுதவியாக வழங்குவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படை யில் 1,37,000.00 ரூபா சங்க நிதிக்கு கிடைத்தது. அனைத்துப் பெற்றோர்களும் பணம் வழங்காதது கவலைக்குரியதாகும்.

மாணவர்களின் கல்வி அடைவை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை நிறைவுபெற்றதும் க.பொ.த (உ/த) க.பொ.த (சா/த) வகுப்புக்களுக்கு ஒரு மணிநேர மேலதிக வகுப்பு நடத்தப்படுகின்றது. இதன்மூலம் மாணவர்களது அடைவுமட்டத்தை மேலும் உயர்த்துவதற்கு முயற்சி செய்து வருகின்றோம்.

க.பொ.த. (உ/த) க.பொ.த (சா/த) பெறுபேறுகளில் நாம் உயர் சித்தி வீதத்தைக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாக இருக்கும். அதேவேளையில் தர ரீதியாக உயர்வடைய முயற்சிப்போம் எனக்கூறி ஆண்டுச் செயற்பாட் டறிக்கையை நிறைவுசெய்கின்றேன்.

| | |
|---|---|
| அ. கயிலாயபிள்ளை | கா. சிவஞானசுந்தரம் |
| அதிபர் - தலைவர் | செயலாளர் |

# பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் 2011-ம் ஆண்டிற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீ/வ காசு | 8,530.00 | திருத்தச் செலவுகள் 3 | 239,094.50 |
| வங்கி | 1530,136.07 | சுகாதாரமும் பாடசாலைச் சுத்தமும் | 163,430.00 |
| விற்பனை மூலம் கிடைத்த வரவு 1 | 87,225.00 | விளையாட்டுப்போட்டி 4 | 186,518.00 |
| தாமோதரன் சஞ்சிகை 2 | 373,300.00 | பாடசாலையில் இடம்பெறும் | |
| வலயக்கல்வி அலுவலகம் மீளளிப்பு | 40,920.00 | நிகழ்வுகள் 5 | 109,824.50 |
| மின் கட்டணம் மீளளிப்பு | 119,716.50 | ஊழியர் சம்பள கொடுப்பனவு | 48,500.00 |
| தொலைபேசி கட்டணம் மீளளிப்பு | 10,139.92 | பேருந்து தொடர்பான செலவு | 127,589.48 |
| பெற்றோர் பங்களிப்பு | 1120,487.00 | முச்சக்கர வண்டி தொடர்பான செலவு | 3,090.00 |
| சந்தா | 4,000.00 | பொருட் கொ/வு 6 | 42,130.00 |
| பரீட்சை வரவு | 263,714.00 | புத்தகங்கள் கொ/வு | 53,369.00 |
| WFP மீளளிப்பு | 386,232.50 | பத்திரிகை கொ/வு | 38,190.00 |
| அச்சிட்டமைக்காக ZDE பெற்றமை | 95,278.25 | மூலதனப் பொருட் கொ/வு 7 | 212,320.00 |
| சம்பள கொடுப்பனவிற்காக பெற். பங்களிப்பு | 90,230.00 | கட்டிட நிர்மாணங்கள் 8 | 1810,529.20 |
| தண்டப் பணம் | 3,900.00 | அலுவலக உபகரண கொ/வு | 62,345.00 |
| நூலகப் பதிவுக் கட்டணம் | 13,730.00 | காகிதாதிகள் கொ/வு | 20,965.00 |
| ஆய்வுகூட நிதிப் பங்களிப்பு | 13,350.00 | பரீட்சைச் செலவு | 156,651.00 |
| 2012 – ம் ஆண்டு அ/தி நிதி | 137,500.00 | மின்சாரக் கட்டணம் | 188,143.00 |
| பேரூந்தின் மூலம் கிடைத்த வரவு | 51,000.00 | தொலைபேசி கட்டணம் | 21,818.13 |
| புத்தக கொ/வுக்காக அமைச்சிடம் பெற்றது | 28,742.00 | கருத்தரங்குகள் | 8,210.00 |
| இதர வருமானம் | 900.00 | விளம்பரங்கள் | 23,329.60 |
| மீளளிப்பிற்கான காசோலை வைப்புக்கள் | 58,250.00 | WFP மரக்கறி கொ/வு | 386,232.50 |
| வங்கியில் நேரடி வைப்பு | 16,060.00 | தாமோதரன் வெளியீடு | 205,000.00 |
| ஒப்பந்த பிடி காசு | 7,217.31 | அஞ்சல் கட்டணம் | 4,349.00 |
| Unicef மலசலகூடத் தொகுதி | | ஏனைய செலவு | 38,600.80 |
| அமைப்பதற்கான நிதி | 502,354.09 | காசோலை வைப்புக்களுக்கான | |
| பஸ்தரிப்பிடத்திற்கான ஆசிரியர் | | மீளளிப்பு | 58,250.00 |
| பங்களிப்பு | 126,000.00 | வங்கிக் கட்டணம் | 2,282.00 |
| | | தர உள்ளீடு | 5,025.00 |
| | | உபசரணைச் செலவு | 6,973.00 |
| | | மீ/செ காசு | 7,888.00 |
| | | வங்கி | 858,265.93 |
| | | | |
| | 5088,912.64 | | 5088,912.64 |

AKailayapillai

அ. கயிலாயபிள்ளை
தலைவர்

P. Kuhan

பு. குகானந்தன்
பொருளாளர்

01-01-2011 தொடக்கம் 31-12-2011 வரையுள்ள காலப்பகுதிக்கான பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வரவு செலவு அறிக்கை எனக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், செலவு உறுதிச்சீட்டுக்கள், பேரேடு, வருமானப் பகுப்பாய்வு காசோலைப் புத்தகங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும் சங்க உறுப்பினர்களின் விளக்கங்களின் அடிப்படையிலும் சரியானவையென திருப்தியடைகின்றேன்.

மா. தயாகுமரன்
கணக்காய்வாளர்

**குறிப்பு 1**

## விற்பனை மூலம் கிடைத்த வரவு

| விபரம் | தொகை |
|---|---|
| தேர்ச்சி அறிக்கை விற்பனை | 10,375.00 |
| கழுத்துப்பட்டி விற்பனை | 15,000.00 |
| மாணவர் பதிவேடு விற்பனை | 8,310.00 |
| மாணவர் இலட்சனை விற்பனை | 53,540.00 |
| **மொத்தம்** | 87,225.00 |

**குறிப்பு 2**

## தாமோதரன் சஞ்சிகை

| விபரம் | தொகை |
|---|---|
| தாமோதரன் விளம்பரம் | 1,85,000.00 |
| தாமோதரன் சஞ்சிகை விற்பனை | 1,88,300.00 |
| **மொத்தம்** | 3,73,300.00 |

## குறிப்பு 3
## திருத்தச் செலவுகள்

| விபரம் | தொகை |
|---|---|
| கட்டிட திருத்தச் செலவு | 1,57,540.00 |
| தளபாடத் திருத்தச் செலவு | 7,840.00 |
| மின்சார திருத்த வேலை | 30,540.00 |
| கணனி திருத்த வேலை | 15,930.00 |
| ஏனைய திருத்த வேலை | 27,244.50 |
| **மொத்தம்** | 2,39,094.50 |

## குறிப்பு 4
## விளையாட்டுப்போட்டி

| விபரம் | தொகை |
|---|---|
| இல்ல விளையாட்டுப் போட்டி | 85,023-00 |
| வலயமட்ட விளையாட்டுப்போட்டி | 48,479.00 |
| மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டி | 25,960.00 |
| மாகாண, தேசிய மட்ட போட்டிகள் | 26,056.00 |
| ஏனைய போட்டிகள் | 1,000.00 |
| **மொத்தம்** | 1,86,518.00 |

## குறிப்பு 5
## பாடசாலையில் இடம்பெறும் நிகழ்வுகள்

| விபரம் | தொகை |
|---|---|
| நிறுவுநர் தினச் செலவுகள் | 39,425.00 |
| பரிசில் நாள் செலவுகள் | 19,035.00 |
| தமிழ்த்தினச் செலவுகள் | 33,560.00 |
| ஆங்கிலதினச் செலவுகள் | 14,654.50 |
| ஆசிரியர் தினச் செலவுகள் | 3,150.50 |
| **மொத்தம்** | 1,09,824.50 |

## குறிப்பு 6

## பொருட்கள் கொள்வனவு

| விபரம் | தொகை |
|---|---|
| மாணவர் பதிவேடு | 29,380.00 |
| மாணவர் தேர்ச்சி அறிக்கை | 12,750.00 |
| **மொத்தம்** | 42,130.00 |

## குறிப்பு 7

## மூலதனப் பொருட் கொள்வனவு

| விபரம் | தொகை |
|---|---|
| கட்டிடப் பொருட்கள் கொள்வனவு | 1,10,821.00 |
| தளபாடக் கொள்வனவு | 92,379.00 |
| மின்சாரப் பொருட்கள் கொள்வனவு | 9,120.00 |
| **மொத்தம்** | 2,12,320.00 |

## குறிப்பு 8

## கட்டிட நிர்மாணங்கள்

| விபரம் | தொகை |
|---|---|
| மலசலகூடத் தொகுதி மற்றும் 100 அடி மதில் | 8,40,439.80 |
| பேருந்து தரிப்பிடம் | 6,86,508.40 |
| சமையலறை | 2,01,226.00 |
| பழைய ஆரம்ப பாடசாலைக் கட்டடத் திருத்தம் | 82,355.00 |
| **மொத்தம்** | 18,10,529.20 |

# க.பொ.த (சா/த) பரீட்சை 2011 பெறுபேறு

| பாடங்கள் | | விண்ணப்பித்தோர் தொகை | தோற்றியோர் தொகை | A தொகை | B தொகை | C தொகை | S தொகை | W தொகை | சித்தி தொகை | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் (12) | | 203 | 200 | 187 | 5 | 7 | 1 | 0 | 200 | 100.00 |
| கிறிஸ்தவம் (றோ.க) (14) | | 2 | 2 | 1 | 1 | | | | 2 | 100.00 |
| கிறிஸ்தவம் (றோ.க.அ.) (15) | | 1 | 1 | 0 | 1 | | | | 1 | 100.00 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் (22) | | 206 | 203 | 57 | 72 | 50 | 20 | 4 | 199 | 98.03 |
| ஆங்கிலமொழி (31) | | 206 | 203 | 28 | 10 | 43 | 59 | 63 | 140 | 68.97 |
| கணிதம் (32) | | 206 | 203 | 57 | 35 | 47 | 48 | 16 | 187 | 92.12 |
| வரலாறு (33) | | 206 | 203 | 36 | 42 | 61 | 44 | 20 | 183 | 90.15 |
| விஞ்ஞானம் (34) | | 206 | 203 | 21 | 30 | 56 | 64 | 32 | 171 | 84.24 |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (60) | 1-ம் பாடத்தொகுதி | 99 | 98 | 31 | 17 | 26 | 15 | 9 | 89 | 90.82 |
| புவியியல் (61) | 1-ம் பாடத்தொகுதி | 46 | 46 | 3 | 11 | 22 | 5 | 5 | 41 | 89.13 |
| குடியுரிமைக்கல்வி மற்றும் சமூக நிர்வாகம் (62) | 1-ம் பாடத்தொகுதி | 61 | 59 | 11 | 11 | 18 | 16 | 3 | 56 | 94.92 |
| முயற்சியாண்மை கற்கை (63) | 1-ம் பாடத்தொகுதி | | | | | | | | | |
| | 1-ம் பாடத்தொகுதி | | | | | | | | | |
| சங்கீதம் (கர்நாடகம்) (42) | 2-ம் பாடத்தொகுதி | 17 | 15 | 5 | 5 | 3 | 2 | 0 | 15 | 100.00 |
| சித்திரம் (43) | 2-ம் பாடத்தொகுதி | 8 | 8 | 0 | 0 | 3 | 4 | 1 | 7 | 87.50 |
| நடனம் (பரதம்) (45) | 2-ம் பாடத்தொகுதி | 10 | 9 | 2 | 1 | 5 | 1 | 0 | 9 | 100.00 |
| இலக்கியநயம் ஆங்கிலம் (46) | 2-ம் பாடத்தொகுதி | 25 | 25 | 2 | 4 | 8 | 6 | 5 | 20 | 80.00 |
| நாடகமும் அரங்கியலும் (51) | 2-ம் பாடத்தொகுதி | 82 | 81 | 43 | 28 | 10 | 0 | 0 | 81 | 100.00 |
| இலக்கிய நயம் தமிழ் (47) | 2-ம் பாடத்தொகுதி | 61 | 60 | 16 | 12 | 19 | 10 | 3 | 57 | 95.00 |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (80) | 3-ம் பாடத்தொகுதி | 59 | 59 | 10 | 7 | 18 | 19 | 5 | 54 | 91.53 |
| கடற்றொழிலும் உணவுத் தொழிநுட்பவியலும் (82) | 3-ம் பாடத்தொகுதி | | | | | | | | | |
| மனைப்பொருளியல் (85) | 3-ம் பாடத்தொகுதி | 6 | 6 | 0 | 1 | 1 | 4 | 0 | 6 | 100.00 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் (86) | 3-ம் பாடத்தொகுதி | 91 | 89 | 26 | 21 | 31 | 8 | 3 | 86 | 96.63 |
| விவசாயமும் உணவுத் தொழிநுட்பவியலும் | 3-ம் பாடத்தொகுதி | 50 | 49 | 11 | 7 | 20 | 8 | 11 | 46 | 93.88 |

விண்ணப்பித்தோர் 206 தோற்றியோர் 203

# க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறு - 2011

| | பாடங்கள் | விண்ணப் பித்தோர் தொகை | தோற்றி யோர் தொகை | A | B | C | S | F | சித்தி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | தொகை | % |
| BIO | உயிரியல் | 34 | 33 | 0 | 3 | 15 | 11 | 4 | 29 | 87.87 |
| | இரசாயனவியல் | 34 | 33 | 2 | 2 | 9 | 15 | 5 | 28 | 84.84 |
| | பௌதிகவியல் | 34 | 33 | 0 | 5 | 10 | 9 | 9 | 24 | 72.72 |
| | பொது சாதாரண பரீட்சை | 34 | 33 | 1 | 4 | 7 | 21 | 0 | 33 | 100 |
| | GIT | - - | - - | - | - | - | - | - | - | - |
| | பொது ஆங்கிலம் | 34 | 33 | 0 | 0 | 2 | 5 | 26 | 7 | 21.21 |
| MATHS | இணைந்த கணிதம் | 57 | 55 | 1 | 3 | 16 | 11 | 24 | 31 | 56.36 |
| | இரசாயனவியல் | 57 | 55 | 1 | 4 | 11 | 18 | 21 | 34 | 61.81 |
| | பௌதிகவியல் | 57 | 55 | 0 | 5 | 12 | 19 | 19 | 36 | 65.45 |
| | பொது சாதாரண பரீட்சை | 57 | 54 | 1 | 2 | 18 | 29 | 4 | 50 | 92.58 |
| | GIT | - - | - - | - | - | - | - | - | - | - |
| | பொது ஆங்கிலம் | 57 | 55 | 1 | 0 | 2 | 4 | 48 | 7 | 12.72 |
| COMMERCE | கணக்கீடு | 47 | 37 | 1 | 3 | 2 | 13 | 18 | 19 | 51.35 |
| | வணிகவியல் | 47 | 36 | 0 | 3 | 11 | 12 | 10 | 26 | 72.22 |
| | பொருளியல் | 47 | 39 | 4 | 5 | 13 | 7 | 10 | 29 | 74.36 |
| | புள்ளி விபரவியல் | - - | - - | - | - | - | - | - | - | - |
| | | | | | | | | | | |
| | பொது சாதாரண பரீட்சை | 47 | 35 | 0 | 0 | 2 | 24 | 9 | 26 | 74.28 |
| | GIT | - - | - - | - | - | - | - | - | - | - |
| | பொது ஆங்கிலம் | 47 | 28 | 0 | 0 | 0 | 2 | 26 | 2 | 7.14 |
| ARTS | அளவையியல் | - - | - - | - | - | - | - | - | - | - |
| | புவியியல் | 177 | 156 | 6 | 16 | 55 | 60 | 19 | 137 | 87.82 |
| | தமிழ் | 225 | 197 | 4 | 46 | 77 | 48 | 22 | 175 | 88.83 |
| | இந்துநாகரிகம் | 30 | 25 | 3 | 4 | 11 | 5 | 2 | 23 | 92 |
| | இந்துசமயம் | - - | - - | - | - | - | - | - | - | - |
| | கிறிஸ்தவம் | - - | - - | - | - | - | - | - | - | - |
| | வரலாறு | 135 | 122 | 17 | 36 | 45 | 20 | 4 | 118 | 96.72 |
| | அரசியல் | 30 | 29 | 3 | 1 | 9 | 14 | 2 | 27 | 93.10 |
| | நடனம் (பரதம்) | 18 | 11 | 0 | 10 | 0 | 1 | 0 | 11 | 100 |
| | சங்கீதம் (கர்நாடகம்) | 22 | 17 | 4 | 10 | 3 | 0 | 0 | 17 | 100 |
| | நாடகமும் அரங்கியலும் | 27 | 24 | 3 | 5 | 11 | 5 | 0 | 24 | 100 |
| | சித்திரம் | 5 | 5 | 0 | 0 | 3 | 1 | 1 | 4 | 80 |
| | பொருளியல் | 27 | 25 | 1 | 4 | 3 | 12 | 5 | 20 | 80 |
| | புள்ளி விபரவியல் | - - | - - | | - | - | - | - | - | - |
| | பொது சாதாரண பரீட்சை | 234 | 206 | 0 | 0 | 4 | 159 | 43 | 163 | 79.12 |
| | GIT | | | | | | | | | |
| | பொது ஆங்கிலம் | 234 | 208 | 0 | 0 | 0 | 8 | 200 | 8 | 3.82 |

| | உயிரியல் விஞ்ஞானம் | கணிதம் | வர்த்தகம் | கலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பித்தோர் தொகை | 34 | 57 | 47 | 234 | 372 |
| தோற்றியோர் தொகை | 33 | 55 | 39 | 207 | 334 |
| எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந் தோர் தொகை | 22 | 24 | 19 | 166 | 231 |
| 3 F எடுத்தோர் தொகை | 03 | 09 | 07 | 04 | 23 |
| 2 F எடுத்தோர் தொகை | 03 | 15 | 07 | 11 | 36 |
| 1 F எடுத்தோர் தொகை | 05 | 07 | 06 | 26 | 44 |
| 3 A எடுத்தோர் தொகை | 00 | 00 | 00 | 01 | 01 |
| 2 A எடுத்தோர் தொகை | 00 | 00 | 01 | 05 | 06 |
| 1 A எடுத்தோர் தொகை | 02 | 02 | 03 | 25 | 32 |
| பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக் கத் தகுதியானோர் தொகை | 22 | 24 | 19 | 166 | 231 |
| Super Merit பெற்றோர் தொகை | - | - | - | - | - |
| Merit பெற்றோர் தொகை | - | - | - | 01 | - |
| சென்ற வருடம் (2010) பல்கலைக் கழகம் சென்றோர் தொகை | 24 | 30 | 20 | 57 | 131 |

# கல்லூரி அடிப்படைத் தகவல்கள்

1. பாடசாலைப் பெயர்: யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2. பாடசாலைத் தரம்: 1 AB (தேசிய பாடசாலை)
3. தபால் விலாசம்: A9 வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி
4. தொலைபேசி இல.: 021-2270350, 021-2270351
5. வகுப்புக்கள்: தரம் 6 - 13 வரை (கலவன்)
6. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும்: சாவகச்சேரி வடக்கு J/303
7. மின்னஞ்சல்: chavahindu@gmail.com
8. இணைய முகவரி: WWW.chc.sch.lk
9. பாடசாலை இலக்கம் (ID No.): 1003002
10. கல்லூரி ஆரம்பம்: 1904
11. நிறுவுநர்: அமரர் வி. தாமோதரம்பிள்ளை அவர்கள்
12. தேசிய பாடசாலையான தினம்: 05-02-1993
13. வருடாந்த தொகை மதிப்பு இல.: 09353
14. தரம் 9 மாகாண மட்டப் பரீட்சை இல.: C002
15. க.பொ.த. (சா/த), (உ/த) பாடசாலை இல.: 11436
16. பழைய மாணவர் சங்க கணக்கு இல.: 110100120000459 மக்கள் வங்கி, சாவகச்சேரி
17. பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கிலக்கம்: 110100140000415 மக்கள் வங்கி, சாவகச்சேரி
18. தர உள்ளீடு கணக்கிலக்கம்: 110100180000833 மக்கள் வங்கி, சாவகச்சேரி
19. வசதிகள் சேவைகள் கட்டண கணக்கு இலக்கம்: 110100190000192 மக்கள் வங்கி, சாவகச்சேரி
20. கணனி ஆய்வு கூட கணக்கு இலக்கம்: 110100130000699 மக்கள் வங்கி, சாவகச்சேரி
21. ஆசிரியர் சம்பளக் கணக்கு இலக்கம்: 110100170000013 மக்கள் வங்கி, சாவகச்சேரி
22. அதிபர் பெயர்: திரு. அருணாசலம் கயிலாயபிள்ளை
23. அதிபர் முகவரி: அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை
24. தொலைபேசி இல.: 021-2270378
25. மின்னஞ்சல்: akailash03@gmail.com

28.10.1996

30.07.2010

# யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## தூரநோக்கு

*ஆளுமையும் அறிவாற்றலும் உள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் ஒரு முன்னணிப் பாடசாலையாக விளங்கவைத்தல்.*

## *Vision*

Make the institution a leading one in the country by producing good citizens with knowledge and Personality

---

## பணிக்கூற்று

*தேசிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப சகல மாணவர்களையும் வழிப்படுத்தி, சைவத்தமிழ் மரபுகளையும் விழுமியங்களையும் பேணி, நவீனத்துவத்திற்கு முகங்கொடுக்கும் வகையில் அதற்கான பலத்தையும் அர்ப்பணிப்பையும் அவர்களுக்கு வழங்குதல்.*

## *Mission*

Provide enough strength and courage to all students to face the challenges of the modern trend in concord with the national policies of education in the context of Hindu Tamil traditions,

---

## மகுட வாசகம்

*நலமே* *நாடுக புரிக ஒளிர்க*